நாம் தமிழர் கட்சியின் இடைத்தேர்தல் வேட்பாளர் கார்த்திகா கைது!

அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைக்கு கண்டனம்!

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!

நாகை, அக். 22 -

மனித நேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம். எச். ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தாராபுரம் சட்டமன்றத் நாம் தமிழர் கட்சியின் இடைத்தேர்தல் வேட்பாளர் கார்த்திகா கைது: அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைக்கு கண்டனம்.

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவரும் நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் எம். எச். ஜவாஹிருல்லா வெளியிடும் அறிக்கை

தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்ட கார்த்திகாவையும் அவரது கணவரையும் காவல்துறையினர் கைது செய்திருப்பது அதிர்ச்சி



யளிக்கிறது. இந்தக் கைது நடவடிக்கையின் பின்னணி மற்றும் அதில் பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அனைத்தும் கடும் கண்டனத்திற்குரியவை.

ஜனநாயகத்தில் அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவதற்கும், தங்களது கருத்துகளை மக்களிடம் எடுத்துரைப்பதற்கும், ஆளுங்கட்சியின் செயல்பாடுகளை விமர்சிப்ப தற்கும் முழு உரிமை உண்டு. அரசியல் கருத்து வேறுபாடுகள் காரணமாக எவரும் பழிவாங்கப்படக் கூடாது. சட்டம் அனைவருக்கும் சமமாகச் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதே ஜனநாயகத்தின் அடிப்படை நெறியாகும்.

தாராபுரம் இடைத்தேர்தலின் போது கடந்த அக்டோபர் 2ஆம் தேதி தாராபுரத்தில் நாம் தமிழர் கட்சியின் தேர்தல் பணிமனைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த விளம்பர பலகை அகற்றப்பட்டதைக் கண்டித்து, அக்கட்சியினர் காவல் நிலையம் முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து, தேர்தல் காலத்தில் வாக்காளர்களுக்குப் பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்கப்படுவதாகக் குற்றம்சாட்டிய வேட்பாளர் கார்த்திகா, தேர்தல் அலுவலரிடம் புகார் அளித்தார்.

வாக்காளர்களுக்கு பணம் கொடுத்த புகார் மீது நடவடிக்கை எடுக்காத காவல்துறை தேர்தல் பரப்புரை தொடர்பான வழக்கில் தற்போது கைது செய்திருப்பது பழிவாங்கலின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளது.

ஒருவர் மீது குற்றச்சாட்டு இருந்தால், உரிய விசாரணை நடத்தி, சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது சட்டப்பூர்வ நடைமுறைகள் முழுமையாகப் பின்பற்றப்பட வேண்டும். குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படுவதற்கு முன்பே எவரும் குற்றவாளியாகச் சித்தரிக்கப்படக் கூடாது.

எனவே, கார்த்திகா மற்றும் அவரது கணவர் மீதான வழக்குகளின் விவரங்களைத் தமிழக அரசு வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும். முறையற்ற வகையில் கைதுச் செய்யப்பட்டுள்ள சகோதரி கார்த்திகாவும் அவரது கணவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசியல் எதிர்ப்புக் குரல்களை ஒடுக்குவது ஜனநாயகத்தின் வலிமையல்ல; அது ஜனநாயகத்தின் மாண்பைக் குலைக்கும் செயல். சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட வேண்டும்; அரசியல் பழிவாங்கலுக்கு இடமளிக்கக் கூடாது!

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு

திரு.வி.க.நகர் மண்டலத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை!

மேயர் திருமதி ஆர்.பிரியா பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

சென்னை,அக்.22-

நேற்று (21.10.2026) மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருவதைத் தொடர்ந்து, திரு.வி.க.நகர் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேயர் அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-71க்குட்பட்ட பெரம்பூர் சுரங்கப்பாதையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் அகற்றும் நடவடிக்கைகளையும், ஸ்டீபன்சன் சாலை செங்கை சிவம் பாலம் பகுதியில், ஓட்டேரி



நல்லா கால்வாயில் தண்ணீர் தங்குதடையின்றி செல்வதையும், வார்டு-72க்குட்பட்ட காந்தி கால் வாயில் நீர் சீராகச் செல்வதையும், வார்டு -77க்குட்பட்ட பவுடர் மில்ஸ் சாலை பேசின் பாலம் பகுதியில் நடைபெற்று வரும் மழை நீர் வடிகால் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின்போது, மேயர் அவர்கள் பேசின் பாலம் பகுதியில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளை விரைந்து முடித்திடவும், மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்கள் மற்றும் அனைத்து கால்வாய்களிலும் நீர் தங்கு தடையின்றி சீராகச் செல்வதை உறுதி செய்திடும் வகையில் கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ச்சியாக, ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்காணிப்பு நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் புகார்கள் மீது உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின் போது, மண்டல அலுவலர் சதீஷ் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

துறைமுகம் மேற்கு பகுதி வர்த்தக அணி துணை அமைப்பாளர்

எஸ்.கணேசன் (எ) ஜோசப் - க.தேவி (எ) ஆஸ்நாத் இல்லத் திருமண வரவேற்பு!

பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ, வாழ்த்துகிறார்! பிரியா ராஜன் – தயாநிதி மாறன் – கலாநிதி வீராசாமி பங்கேற்பு!

சென்னை, அக். 22 -

கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் மற்றும் கழக இளைஞர் அணிச் செயலாளர், எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல் வாழ்த்துக்களுடன் சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதி வர்த்தக அணி துணை அமைப்பாளர் கொத்தவால் சாவடி எஸ். கணேசன் (எ) ஜோசப் - க.தேவி (எ) ஆஸ்நாத் ஆகியோரின் புதல்வி க.கனிமொழி (எ) எப்சிபாக்கும், சென்னை, கொளத்தூர் டி.செல்லையா (எ) மேனியல் - செ.அமுதா (எ) ஷீபாராணி ஆகியோரின் புதல்வர் செ.பிரசாந்த் (எ) ரூபனுக்கும் திருமண வரவேற்பு விழா (26.10.2026 - திங்கட்கிழமை) மாலை 6.30 மணிக்கு, சென்னை, பெரவள்ளூர், ஜி.கே.எம். காலனியில் உள்ள பேரறிஞர் அண்ணா திருமண மஹாலில் நடைபெறுகிறது.

துறைமுகம் மேற்கு பகுதிச் செயலாளர் எஸ்.முரளி தலைமை வகிக்கிறார்.

எஸ்.இராஜசேகர், ஐ.சி.



எஃப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, இரா.நரேந்திரன், எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், கோ.சு.மணி, ப.ஸ்ரீராமுலு, இசட்.ஆசாத், வி.சுதாகர், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, இரா.கலைச்செல்வி, எம்.இப்ராஹிம் கனி, பா.ஜெகதீஷ், எம்.விநாயகம், மு.பி.விஜயகுமார், பா.பிரதீப்குமார், எல்.சம்பத் குமார், பா.அண்ணாதுரை, எஸ்.புகழேந்தி, மு.செல்வகுமார், கே.ஆர்.அபரஞ்சி, டி.போஸ், டி.எஸ்.சேகர், பூக்கடை வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

57 (அ) வட்டக் கழக நிர்வாகிகள் ஜி.துளசிராமன், டி.வேலு, கே.பவானி, ஆவின் சந்திரசேகர், பா.முத்துக்குமார், கேபிள் சங்கர், ஜெயின், ரூபாராம் பட்டேல், நா.மோகன், கே.ஜெய் பிரகாஷ், எல். சாந்தி லால், எஸ்.அசோக் ஜெயின், பா.நடராஜன், டி. சேகர், ஆர்.வேலாயுதம், சு. அண்ணாதாசன், பண்ணை ஜி.மோகன், குட்டி (எ) சிவகுமார், எம்.சாய் பவன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இவ்விழாவில் மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இவ்விழாவில் ஆர்.எஸ். பாரதி, டி.கே.எஸ்.இளங்கோவன், அன்பகம் கலை, ப.தாயகம் கவி, துறைமுகம் காஜா, இரா.கிரிராஜன் எம்.பி, ப. ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, ஜோசப் சாமுவேல், கோ.ஏகப்பன், தேவஜவகர், புனிதவதி எத்திராஜ், கே.சந்துரு சி.மகேஷ்குமார், டி.எஸ். பி.இராஜகோபால், எம். டி..ஆர்.நாகராஜ், கூ.பி. ஜெயின் எம்.சி, வே.வாசு, செ.தமிழ்வேந்தன், எம். சாமிக்கண்ணு, டாக்டர் சாந்தகுமாரி எம்.சி, சரிதா மகேஷ் குமார் எம்.சி, பி.கே.மூர்த்தி எம்.சி, வி.பரிமளம் எம்.சி, ராஜேஷ் ஜெயின் எம்.சி, நாஹா நவீன் எம்.சி,

வானவில் விஜய், நா.துலுக்கானம், எம்.பெரோஸ்கான், ராஜா முகமது, இரா.வீரமணி, எல்.பி.எப்.மோகன், சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், புரசை ஜி.தாமோதரன் மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி, சி.காந்தி, தேவகானம் ராஜா, எம்.கவியரசன், எம். சாமுவேல், மு.செல்வகுமார், பி.தம்பி ராஜா, எம்.சாரதி, எம்.ஜெகன், பி.இளைய ராஜா ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.



துணை மேயர் மு.மகேஷ்குமார், நேற்று (21.10.2026) பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருவதைத் தொடர்ந்து, ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் கண்காணிப்பு நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

தலைமைக்கழகப் பிரதிநிதிகள் பேரா. ஜெ. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி., எஸ். ஆஸ்டின் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில்

சென்னை கிழக்கு மாவட்டக் கழக மறுசீரமைப்புக் கூட்டங்கள்!

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டக் கழக மறுசீரமைப்புக் கூட்டங்கள், 23.10.2026 வெள்ளிக்கிழமையன்று, மாவட்ட அவைத் தலைவர் கோ. ஏகப்பன் தலைமையிலும், தலைமைக்கழகப் பிரதிநிதிகள் பேரா. ஜெ.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி. மற்றும் எஸ். ஆஸ்டின் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையிலும், கீழ்க்கண்ட அட்டவணைப்படி, குறிப்பிடப்பட்ட இடங்களில் நடைபெறவுள்ளன.

நாள்: 23.10.2026, வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணி முதல்

நேரம்	சட்டமன்றத் தொகுதி	கூட்டம் நடைபெறும் இடம்
மாலை 4.00 மணி	திரு.வி.க. நகர்	எம்.கே.டி.மகால், ஸ்ட்ராஹன்ஸ் சாலை, ஓட்டேரி, சென்னை - 12.
மாலை 4.45 மணி	எழும்பூர்	எம்.கே.டி. மகால், ஸ்ட்ராஹன்ஸ் சாலை, ஓட்டேரி, சென்னை - 12.
மாலை 5.30 மணி	துறைமுகம்	எம்.கே.டி.மகால், ஸ்ட்ராஹன்ஸ் சாலை, ஓட்டேரி, சென்னை - 12.

நாள்: 23.10.2026, வெள்ளிக்கிழமை, மாலை 06.15 மணி முதல்

நேரம்	சட்டமன்றத் தொகுதி	கூட்டம் நடைபெறும் இடம்
மாலை 6.15 மணி	வில்லிவாக்கம்	டி.கே.ஏ. திருமண மண்டபம், எம்.டி.எச். சாலை, வில்லிவாக்கம்.
மாலை 7.00 மணி	கொளத்தூர்	டி.கே.ஏ. திருமண மண்டபம், எம்.டி.எச். சாலை, வில்லிவாக்கம்.
மாலை 7.45 மணி	அம்பத்தூர்	டி.கே.ஏ. திருமண மண்டபம், எம்.டி.எச். சாலை, வில்லிவாக்கம்.

மேற்கண்ட இடங்களில், குறிப்பிட்ட நேரங்களில் நடைபெறவுள்ள மாவட்டக் கழக மறுசீரமைப்புக் கூட்டங்களில், அந்தந்த சட்டமன்றத் தொகுதிகள் மற்றும் பகுதிகளுக்குட்பட்ட மாநில நிர்வாகிகள், இந்நாள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், பிற அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள் ஆகிய அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப் பணிகள் மற்றும் கழக மறுசீரமைப்பு.

பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ.
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

